**நேரடிதொடர்பின்றி ஆதார் எண் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட சேவைகளின் கீழ் ஓட்டுநர்உரிமம் புதுப்பிப்பதற்கான(DL Renewal) விண்ணப்பம்**

https://parivahan.gov.in என்னும் இணையதளத்தைப் பார்க்கவும்.

↓

இணையவழி சேவைகளைத் தேர்ந்தெடுக்கவும்
(online services)

↓

ஓட்டுநர்உரிமம் தொடர்பான சேவைகள் (DL related services)

↓

தமிழ்நாடு(Tamil Nadu) மாநிலத்தை தேர்ந்தெடுக்கவும்

↓

"ஓட்டுநர்உரிமம் புதுப்பித்தல்"-என்பதை தேர்வு செய்யவும்
(DL Renewal)

→ ஏற்கனவே உள்ள ஓட்டுநர் உரிமத்தின் எண் மற்றும் பிறந்த தேதியை பதிவு செய்து "சமர்ப்பிக்க" (Submit)என்பதை தேர்வு செய்யவும்.

↓

ஓட்டுநர் உரிமத்திலுள்ள புகைப்படம் மற்றும் கையொப்பம் திரையில் தெரியும் ,
(Passport size Photo)

→ ஓட்டுநர் உரிம விவரங்களைச் சரிபார்த்த பின் 'ஆம்' என்பதைத் உறுதிபடுத்தவும்.

↓

மின்னஞ்சல் முகவரி இருப்பின் அதனை பதிவு செய்து 'உறுதிப்படுத்துக' என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.
(e-mail address)

↓

ஆதார்எண்ணைக் கொண்டு ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் கடவுச்சொல் (OTP-Password) வாயிலாக அங்கீகரிக்கவும்.

→ ஆதாரில் உள்ள பெயர் மற்றும் பிறந்ததேதி ஏற்கனவே உள்ள ஓட்டுநர் உரிமங்களில் உள்ள பெயர் மற்றும் பிறந்ததேதி சரியாக பொருந்த வேண்டும்.

↓

ஓட்டுநர் உரிமம் சேவையின் ஓட்டுநர் உரிமத்தை 'புதுப்பித்தல்' என்பதைத் தேர்வு செய்து, 'தொடர்க' என்பதை தேர்வு செய்யவும்.

↓

படிவம் 1 ஐ தேர்வு செய்து விவரங்களை முழுமையாக நிரப்பவும். உறுதிமொழி சான்றிதழை நிரப்பி பதிவேற்றம் செய்யவும். தற்போது குறியீட்டினை-(Captcha) என்பதை பதிவு செய்து , சமர்ப்பிக்கவும்.

→ புதிய விண்ணப்ப எண் உருவாக்கப்பட்டு விண்ணப்பதாரரின் கைபேசிக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும்.

ஒப்புதல்அட்டை மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அச்சிடுவதற்கு இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. (திரையின் வலதுபக்கம்)

↓

A

A

'அடுத்து' என்பதைத் தேர்ந்தெடுத்து விண்ணப்பத்தின் நிலையைப் பார்க்கவும் . ஓட்டுநர்உரிமத்தின் புகைப்படம் மற்றும் கையொப்பத்தைப் பதிவேற்ற, 'தொடர்க' என்பதை தேர்வு செய்யவும்.

அடுத்த கட்ட வழிமுறைகளை முகப்புப் பக்கத்தின்மூலம் "உங்கள் நிலுவையிலுள்ள விண்ணப்பம்/ விண்ணப்ப நிலையை நிறைவு செய்யுங்கள்" என்பதை தேர்வு செய்யவும்.

ஏற்கனவே உள்ள புகைப்படம் மற்றும் கையொப்பத்துடன் தொடரவும். இல்லையெனில் சமீபத்திய புகைப்படம் மற்றும் கையொப்பம் ஓட்டுநர் உரிமத்தில் (DL) அச்சிடுவதற்கு புதியதாக பதிவேற்றம் செய்யலாம்.

தேவைப்பட்டால், "பிரவுஸ்" (Browse) பொத்தானை தேர்வு செய்து புகைப்படத்தை பதிவேற்றலாம். (பரிந்துரைக்கப்பட்ட வடிவம் மற்றும் அளவின்படி) கையொப்பம் பதிவேற்றம் செய்யப்பட வேண்டியது கட்டாயமாகும் .'பதிவேற்றுக மற்றும் கோப்புகளைப் பார்வையிடுக' என்பதை தேர்வு செய்யவும். புகைப்படம் மற்றும கையொப்பத்தை 'சேமி' என்பதை தேர்வு செய்து 'அடுத்து' என்பதை தேர்வு செய்யவும்.

மேற்கொண்டு ஆவணங்களைப் பதிவேற்ற "தொடரவும்" என்ற பொத்தானை தேர்வு செய்யவும்,

ஆதாரங்கள் மற்றும் ஆவணங்களை தேர்ந்தெடுத்து, "பிரவுஸ்" (Browse) பொத்தானைக் கிளிக்செய்து ஆவணங்களைப் பதிவேற்றவும் (ஆவணத்தைப் பதிவேற்றம் செய்ய கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும்), ஓட்டுநர் உரிமத்தின் நகல் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். 40 வயதுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரருக்கு படிவம் 1ஏ (மருத்துவச்சான்றிதழ்) பதிவேற்றம் செய்யப்படவேண்டும். பின்னர் 'உறுதிப்படுத்து' என்பதை தேர்வு செய்யவும்.

ஆன்லைனில் –கட்டணம் செலுத்த "அடுத்து" என்பதை தேர்வு செய்யவும்

வங்கியின் இணையதள நுழைவு (bank gateway portal) மூலம் வங்கியை தேர்ந்தெடுத்து, கொடுக்கப்பட்ட குறியீட்டினை (Captcha) பதிவு செய்யவும் . கட்டணமுறையை (டெபிட்கார்டு, கிரெடிட்கார்டு, யுபிஐ, நெட்பேங்கிங் போன்றவை) தேர்வுசெய்து பணம் செலுத்தவும். கட்டணத்திற்கான இரசீது உருவாக்கப்படும் விண்ணப்பதாருக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும்.

வெற்றிகரமாக பணம் செலுத்திய பிறகு, அசல் ஓட்டுநர் உரிமத்தை பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் விண்ணப்ப எண்ணைக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட RTO க்கு அனுப்ப வேண்டும்.

சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் ஆவணங்கள் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அதிகாரியால் சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு ஸ்மார்ட்கார்டு ஓட்டுநர் உரிமம் விண்ணப்பதாரருக்கு தபால்மூலம், பதிவு செய்யப்பட்ட விண்ணப்ப முகவரிக்கு அனுப்பப்படும்